
## திராவிடத்தால் வாழ்கிறோம்

805

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இந்து மக்களையே பழிவாங்கத் துடிக்கும் மதவாதம்!

டெல்லியின் புறநகர்ப் பகுதியான சித்தரஞ்சன் பூங்கா, வங்காளிகள் அதிகமாக வசிக்கும் பகுதியாகும். 1960-களில் உருவாக்கப்பட்ட அந்தப் பகுதியிலுள்ள சந்தை அருகே தங்கள் வழிபாட்டுக்காக, காளிக் கோயிலை நிறுவி வழிபட்டு வருகின்றனர் அப்பகுதி மக்கள். இந்த நிலையில், சில நாட்களுக்கு முன் அங்கு சென்ற காவி உடையணிந்த சிலர், புனிதமான கோயிலுக்கு அருகில் மீன்கள், இறைச்சிகளை விற்பனை செய்யக்கூடாது. கோயிலைச் சுற்றியுள்ள இந்துக்களின் உணர்வுகள் பாதிக்கப்படுகின்றன. எனவே மீன், இறைச்சிக் கடைகளை அப்புறப்படுத்த வேண்டும் என எச்சரிக்கை செய்துள்ளனர்.

இதுநாள் வரையில், தாங்கள் வழிபடும் கோயிலுக்கு அருகிலேயே கடைகளை அமைத்திருந்த வியாபாரிகள் இதனால் அச்சமடைந்துள்ளனர். "முக்கிய பண்டிகை நாட்கள், வழிபடும் நாட்களில்கூட தங்கள் வியாபாரம் பாதிக்கப்பட்டதில்லை. அதே தெய்வத்தைத்தான் நாங்கள் வணங்குகிறோம், ஆனால், எங்கிருந்தோ வந்த சிலர் எங்களை மிரட்டுகின்றனர் என அச்சம் தெரிவித்து வருகின்றனர்.

டெல்லி மேம்பாட்டு ஆணையம் அனுமதித்த இடத்தில், விற்பனை செய்துவரும் அந்த வர்த்தகர்களை, டெல்லியில் பா.ஜ.க. ஆட்சி அமைந்த மூன்று மாதங்களில் ஆன்மிகத்தின் பெயரால் இந்து மக்களையே அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது காவிப் பரிவாரங்கள்.

மதத்தின் பெயரிலான பெரும்பான்மைவாதமும், அடிப்படை வாதமும் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கி, தற்போது இந்து உழைக்கும் மக்கள் பக்கமும் திரும்பத் தொடங்கி, இருக்கிறது. எனில், இவர்களின் மதவாதம் யாருக்கானது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். டெல்லி மக்கள் பா.ஜ.க.வுக்கு வாக்கு அளித்ததற்காக, புதிய நெருக்கடிகளை அனுபவிக்கத் தொடங்கி இருப்பதைத்தான் இந்தச் சம்பவம் காட்டுகிறது என கண்டனம் வலுத்து வருகிறது.

## ஃப்ளாஷ்பேக்



### ஆய்வுக்கு தலைவர் தந்த வாழ்த்து!



முனைவர் இறை.கார்குழலி

தஞ்சையில் உள்ள பெரியார் மணியம்மை பொறியியல் கல்லூரியில் பி.இ பட்டம் பெற்று, தொடர்ந்து தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கட்டடக் கலைத்துறையில் தஞ்சையில் பெரிய கோவிலைச் சுற்றி உள்ள 100 ஆண்டு பழமையான கட்டடங்களை ஆய்வு செய்து, எனது 25-வது வயதில் முனைவர் பட்டம் பெற்றேன். அதனைத் தொடர்ந்து இன்றைய முதல்வர் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தலைவர் தளபதி அவர்களை வேளச்சேரியில் அவர்களின் இல்லம் சென்று சந்தித்து எனது ஆய்வேட்டினைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றேன். தலைவர் எனது ஆய்வேட்டில் கையொப்பமிட்டு வாழ்த்தினார்கள். உடன் தலைவர் அவர்களின் துணைவியார் மற்றும் எனது தந்தையும் மாவட்ட அவைத் தலைவருமான சி.இறைவன் எனது தாய் எனது சகோதரி இறை.கவிதா ஆகியோர் உள்ளனர்.

**– முனைவர் இறை.கார்குழலி, மேனாள் மகளிர் அணிப் பிரச்சாரக் குழுச் செயலாளர், தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### அதிக அதிகாரத்தை ஏற்க முடியாது!

1952-ஆம் ஆண்டு வடநாட்டு கவர்னர் நியமனத்துக்கு எதிராக, பேரறிஞர் அண்ணா கண்டன அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில், 'ஜனநாயக முறையில் தேர்தல் மூலம் ஆட்சியை நடத்தும் நிர்வாக அமைப்பில், நியமனமாகி வரும் ஓர் ஆளுநர் – மக்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறவரை, அதிக அதிகாரம் பெற்று தோற்றமளிப்பவராக இருப்பதை தி.மு.கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை' என வலியுறுத்தி இருந்தார்.

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

5


**பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.**

# பெரியார் தந்த 'விடுதலை!'

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம் கொக்கூர். 1940-கள் வரை பார்ப்பனிய மேலாதிக்கம் கொடூரமாக கோலோச்சியது, அந்தக் கிராமத்தில். கிருஷ்ணமூர்த்தி ஐயரின் மகன் குஞ்சிதபாதம் குடும்பத்தின் கட்டுப்பாட்டில்தான் மொத்த ஊரும். பார்ப்பனர்களைத் தவிர, வேறு யாரும் மேல் சட்டை அணியக்கூடாது, காலில் செருப்பு போடக்கூடாது, பள்ளிக்கூடம் செல்லக்கூடாது, முக்கிய சாலைகளைப் பயன்படுத்தக் கூடாது.

தோளில் துண்டு, தலைப்பாகை கட்டவும் அனுமதி கிடையாது, ஊர்க்கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது. பார்ப்பனர்களின் வயல்களில்தான் வேலை செய்ய வேண்டும். ஐயர் தரும் மிகச்சொற்ப நெல்லுக்காக, அக்ரஹாரத்துக்கு வெளியே தென்னை மரத் தடுப்புக்குப் பின்னால் வரிசையில் கையைக் கட்டிக்கொண்டு நிற்க வேண்டும். ஐயரின் ஆட்கள் தரும் நெல்லை வாங்கிக்கொண்டு, ஒற்றையடிப்பாதையில் செல்லவேண்டும்.

இந்தக் கட்டுப்பாடுகளை மீற, கொக்கூரில் இருந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த எவருக்கும் துணிவு இல்லை. ஆனால், முதன்முதலாக சில சிறுவர்களுக்கு அந்தத் துணிச்சல் வந்தது. 1950-களில் குத்தாலம், மயிலாடுதுறைப் பகுதிகளில் நடைபெற்ற திராவிடர் கழகக் கூட்டங்களைப் பார்த்து, சிறுவர்களுக்கு அந்தத் துணிச்சல் வந்தது. அதன்பிறகு பழைய 'விடுதலை' இதழ்களை வாங்கி வந்து, ஊருக்கு வெளியே கருவேலாங்காட்டிற்கு எடுத்துச் சென்று வாசித்தனர். அதன்மூலம் அந்தச் சிறுவர்கள் பெரியாரைப் பற்றிக்கொண்டனர்.




முருகையன்

ஐயர் குஞ்சிதபாதத்தை எதிர்த்த அந்த சிறுவர்களில் ஒருவர் பெயரும் குஞ்சிதபாதம். முருகையன், சுந்தரேசன், அருணாச்சலம், ராசாங்கம், அப்பராசு ஆகியோர் மற்றவர்கள்.

1958-இறுதியில் ஜெயங்கொண்டத்திற்கு வந்திருந்த பெரியாரைத் தங்கள் ஊருக்கு வருமாறு அழைக்கச் சென்றனர் அந்தச் சிறுவர்கள். ஆனால் சிறுவர்கள் என்பதால், பெரியாரைச் சந்திக்க அவர்களை அனுமதிக்கவில்லை. அதைக் கவனித்த பெரியார், சிறுவர்களை வருமாறு அழைத்தார். பெரியாருக்காக வாங்கி வந்த ஒரு கிலோ கறுப்புத் திராட்சையைக் கொடுத்துவிட்டு, தங்கள் ஊரின் பார்ப்பனக் கொடுமையை விவரித்தனர்.

நீங்கள் வந்து பேசினால், எல்லாம் மாறிவிடும் என்று அழைப்பு விடுத்தனர். "சிறுவர்களாக உள்ளீர்களே! உங்களால் கூட்டம் நடத்த முடியுமா?" என பெரியார் கேட்க, "தேதியை மட்டும் கொடுங்கள், மற்றவற்றை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" எனக்கூறினர். 1959 மார்ச் 31-இல் வருவதாக பெரியாரும் ஒப்புக்கொண்டார். இந்தத் தகவல் கொக்கூரில் பரவ, "ஐயரை எதிர்த்து, பெரியாரை அழைத்து வருகிறீர்களா?" என ஊரார் கண்டித்தனர். ஆனாலும், இரவு நேரத்தில் கூடிப்பேசி, கூட்டத்திற்கான பணிகளை அந்தச் சிறுவர்கள் தொடங்கினர்.


திருவ ளுவராண்டு 1990 பங்குனித் திங்கள் 18-ம் நாள் [31..3..59] செவ்வாயன்று கொக்கூருக்கு வருகை தந்த
திராவிடத் தந்தை பெரியார் அவர்கட்கு
கொக்கூர் ஊராட்சிமன்றத்தார் உவந்தளித்த
வரவேற்பு வாழ்த்துரை

அன்றைய மாயவரம், நாகைப் பகுதிகளில் திராவிடர் கழகம் வலுவாக இருந்ததால், அவர்களின் உதவி கிடைத்தது. 20 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள நன்னிலம் வரை சென்று நிதி திரட்டினர். புதூர் ராவணன் என்ற பெரியாரியத் தொண்டர் கொக்கூர் சிறுவர்களுக்கு உறுதுணையாக பல செலவுகளை ஏற்றார். 3 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள இடைக்கம் கிராமத்தில் இருந்து இரட்டை சாரட் பூட்டப்பட்ட குதிரை வண்டியில் கொக்கூருக்குப் புறப்பட்டார் பெரியார். வழியெங்கும் தோரணங்கள், வளைவுகள், வாணவேடிக்கைகள், கரகாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம், சிலம்பாட்டம் என 500 பேர் கூடி வரவேற்க, கம்பீரமாக கொக்கூரில் நுழைந்தார் பெரியார். ஜாதி ஒழிப்பு முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன.

**...பயணிப்போம்.**

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

57

**"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."**

# ஜனநாயகம் நிலைநாட்டப்படும்!

***வக்ஃப் திருத்தச் சட்டத்துக்கு எதிரான வழக்கு, நீட் தேர்வுக்கு எதிரான தீர்மானம் போன்றவற்றில், தி.மு.க. முன்னெடுக்கும் நடவடிக்கைகள் வெற்றியைத் தராது என்றும் தி.மு.க. மக்களை ஏமாற்றுகிறது என்றும் பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் தொடர்ந்து குற்றம்சாட்டுகின்றனவே?***

'நீட் தேர்வு' என்பது தி.மு.க ஆட்சியில் வரவில்லை. இந்திய மருத்துவக் கவுன்சில் கொடுத்த நுழைவுத் தேர்வு பரிந்துரையை, ஒன்றியத்தில் ஆட்சியில் இருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் நிராகரித்து விட்டது. நீதிமன்றமும் நீட் தேவையில்லை எனத் தீர்ப்பளித்தது. அதை எதிர்த்து, மேல்முறையீட்டுக்குச் சென்றது ஆர்.எஸ்.எஸ்.ஸின் 'சங்கல்ப்' என்ற அமைப்பு. மேல்முறையீட்டு வழக்கின் போது பிரதமர் மோடியின் பா.ஜ.க. ஆட்சிதான் நடந்தது. நீட் தேர்வை நடத்துவதாக ஒப்புக்கொண்டதும் பா.ஜ.க. அரசுதான். தமிழ்நாடு இதிலிருந்து விலக்கு கோரியது. ஜெயலலிதா முதல்வராக இருந்த அ.தி.மு.க ஆட்சிக்காலத்திலும் நீட் இங்கு வரவில்லை. எடப்பாடி பழனிசாமி ஆட்சியில்தான் தமிழ்நாட்டிற்குள் நீட் வந்தது. அதற்கு கையெழுத்திட்டவர் அடிமை அமைச்சர்களில் காவியில் ஊறியவரான மாஃபா பாண்டியராஜன். பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும்தான் நீட் தேர்வுக்குக் காரணம். அதற்கு எதிரான சட்டப்போராட்டத்தை எதிர்க்கட்சியாக இருந்தபோது ஆளுங்கட்சியான பிறகும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது தி.மு.க. அதுபோலத்தான் வக்ஃப் சொத்துகள் தொடர்பான மோடி அரசின் திருத்தச் சட்டம், சிறுபான்மை முஸ்லிம்களின் உரிமைகளைப் பறிக்கக்கூடிய வகையிலும், மதவெறியுடன் செயல்படுத்தப்படுவதாலும் அதனை நாடாளுமன்றத்தில் எதிர்த்ததுடன், உச்சநீதி மன்றத்திலும் வழக்கு தொடர்ந்துள்ளது தி.மு.க.



மக்களின் உரிமைகளுக்கான சட்டப் போராட்டங்களை தி.மு.க. நடத்துவது புதிதல்ல. மருத்துவக் கல்லூரி இடங்களில், அகில இந்திய கோட்டாவில் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து சாதகமான தீர்ப்பைப் பெற்றதும் தி.மு.க.தான். தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு ஒப்புதல் வழங்காத ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தி.மு.க அரசு தொடர்ந்த வழக்கில், "ஆளுநரின் செயல் நேர்மையற்றது. இரண்டாவது முறையாக நிறைவேற்றிய தீர்மானங்களை, குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது சட்டவிரோதமானது. அவருடைய நடவடிக்கை ரத்து செய்யப்படுகிறது" என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் பர்திவாலா, மகாதேவன் அமர்வு தீர்ப்பளித்திருப்பதன் மூலம், தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ஆளுநர்களைக் கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசு இணை அரசாங்கம் நடத்த முயற்சிக்கும் அனைத்து மாநிலங்களிலும் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது. இதுதான் தி.மு.கழக சட்டப் போராட்டத்தின் வலிமை. நீட், வக்ஃபு விவகாரங்களிலும் இது சட்டரீதியாக வெளிப்படும்.

> **"ஆளுநர்களைக் கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசு இணை அரசாங்கம் நடத்த முயற்சிக்கும் அனைத்து மாநிலங்களிலும் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது."**

...வினா தொடரும்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131